இணைப்பு: 1

# அணி எண்: 34

## பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் பங்கேற்கும் பணியாளர்களுக்குரிய அறிவுரைகள்:

### பகுதி –அ

பயிற்சிக்குரிய ஆவணங்கள் இடம் பெற்றுள்ள இணைய முகவரிகள் விவரம்:

| விவரங்கள் | இணைய முகவரி |
|---|---|
| 1) ஒப்பந்த ஆவணம்<br>2) பணி விடுவிப்பு ஆணை<br>3) தொடர்புடைய அரசாணைகள்<br>4) பயிற்சி மதிப்பீட்டுப் படிவம் | http://cstibhavanisagar.org/trdoc/link.pdf |
| 1) பயிற்சி நிலையத்தின் இருப்பிடம் | https://goo.gl/maps/BkQka6r2jxL2 |

பயிற்சியாளர்கள் மேற்கண்ட இணையதள முகவரியிலிருந்து பயிற்சி நிலையத்தின் இருப்பிடம், ஒப்பந்த ஆவணம், பணிவிடுவிப்பு ஆணை மற்றும் தொடர்புடைய அரசாணைகள் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

### பகுதி–ஆ

பயிற்சியாளர்கள் பயிற்சி அனுமதி நாளில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பட்டியல்:–

பயிற்சியாளர்கள் கீழ்க்காணும் ஆவணங்களை பயிற்சி அனுமதி நாளில் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

1. அசல் ஒப்பந்த ஆவணம்:–

❖ அரசுக் கடித எண்: 64943/ஏ/75–17/பொது (பயிற்சி) துறை நாள் 27.7.1976 மற்றும் அரசுக் கடித எண்: 74649/பயிற்சி–1/88–2, ப.ம.நி.சீ (பயிற்சி–1) துறை நாள்–26.10.1988–ன் படி ஒவ்வொரு பயிற்சியாளரும் இரண்டு மாத ஊதியத்திற்கு குறையாமல் (குறைந்தபட்சம் ரூ.50,000) ஒரு ஒப்பந்த ஆவணம் வழங்க வேண்டும். இந்த ஒப்பந்தப்பத்திரம் இரண்டு பிரதிகளில் தயார் செய்யப்பட வேண்டும்.

❖ ஒப்பந்த ஆவணத்தின் ஒரு பிரதியை பயிற்சியாளர் வசம் நேரில் கொடுத்து அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதி அலுவலகத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

❖ ஒப்பந்த ஆவணம் சம்பந்தப்பட்ட பயிற்சியாளர், சாட்சிகள், பிணையம் அளித்தவர் மற்றும் அலுவலகத் தலைவர் ஆகியோரால் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். பயிற்சி அனுமதி நாளில் ஒப்பந்த ஆவணம் சமர்ப்பிக்காத பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

- ❖ மாதிரி ஒப்பந்த ஆவணத்தினை **http://cstibhavanisagar.org/trdoc/link.pdf** என்ற இணைய முகவரியில் பயிற்சியாளர்கள் நேரடியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. <u>அடையாள சான்றுடன் கூடிய அசல் பணி விடுவிப்பு ஆணை:</u>
   - ❖ பயிற்சியாளர்கள் அடையாள சான்றுடன் கூடிய அசல் பணி விடுவிப்பு ஆணையை அனுமதி தினத்தன்று சமர்ப்பிக்க வேண்டும். விடுவிப்பு ஆணை படிவத்தினை **http://cstibhavanisagar.org/trdoc/link.pdf** என்ற இணைய முகவரியில் பயிற்சியாளர்கள் நேரடியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   - ❖ விடுவிப்பு ஆணையில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டப்பட்டு, அலுவலகத் தலைவரால் சான்றொப்பம் இடப்பட வேண்டும். பணி விடுவிப்பு ஆணை உரிய படிவத்தில் இல்லாமல் இருப்பின் அல்லது உரிய சான்றொப்பம் இல்லாமல் இருப்பின் அவ்வாணை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்நேர்வில், தனிப்பட்ட அடையாளச் சான்று தேவையில்லை.

3. <u>பணிவரன்முறை உத்தரவு நகல்:</u>
   1. பயிற்சிக்கு அனுப்பப்படும் பணியாளர் தற்போது வகிக்கும் பதவியில் அவரது பணியை வரன்முறை செய்ததற்கான ஆணை நகலை அனுமதி தினத்தன்று சமர்ப்பிக்க வேண்டும். <u>பணி வரன்முறை செய்யப்படாதவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.</u>

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

## <u>பகுதி–இ</u>

**I.** <u>அடிப்படைப் பயிற்சி பெற தகுதி வாய்ந்தவர்களின் விபரம்:-</u>

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் அல்லது கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் அல்லது பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் அல்லது ரூ.4000/– தொகுப்பூதிய அடிப்படையில் 2003–ல் இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சிறப்பு போட்டித் தேர்வின் மூலம் பணி வரன்முறை செய்யப்பட்டவர்கள்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உதவியாளர்கள் அல்லது தட்டச்சரிலிருந்து உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் அல்லது சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையிலிருந்து பணி மாறுதல் மூலம் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள்.
3. சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1 மற்றும் நிலை–2–ல் இருந்து கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்றவர்கள்.
4. பணி விதிகளில் தகுதி காண் பருவம் நிறைவு செய்வதற்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி கட்டாயம் முடித்திருக்க வேண்டும் என்ற பணி விதிகளுக்கு உட்பட்ட பிற பணித்தொகுதியைச் சார்ந்த பணியாளர்கள்.

5. மேலே கூறப்பட்ட <u>அனைத்து பணியாளர்களின் பணியானது தற்போது அவர்கள் வகிக்கும் பதவியில் பணி வரன்முறை</u> செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**II. பயிற்சியிலிருந்து விலக்களிப்பட்டவர்கள் விவரம்:–**

| வ.எண் | பணியாளர்கள் விபரம் | தொடர்புடைய அரசு ஆணைகள் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் அல்லது கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் அல்லது பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் அல்லது ரு.4000/– தொகுப்பூதிய அடிப்படையில் 2003–ல் இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சிறப்பு போட்டித் தேர்வின் மூலம் பணி வரன்முறை செய்யப்பட்டவர்களில் பணி நியமனம் பெறும்போது அல்லது பதவி உயர்வு பெறும்போது 53 வயதை கடந்தவர்கள். | 1) அரசு ஆணை எண் எம்.எஸ். எண்.184, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள்.15.10.1999.<br>2) அரசு ஆணை எண் எம்.எஸ். எண்.120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள்.05.12.2016. |
| 2. | தட்டச்சரிலிருந்து உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களில் பதவி உயர்வு பெறும்போது 53 வயதை கடந்தவர்கள். | அரசு ஆணை எண் எம்.எஸ். எண்.120 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள்.05.12.2016 |
| 3. | 100% பார்வைத்திறன் அற்றவர்கள் மற்றும் 100% கேட்கும் திறன் அற்றவர்கள். | அரசு ஆணை எண் எம்.எஸ். எண்.06 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள்.09.01.2018 |
| 4. | தன்னிச்சையாக ஊன்றுகோல் இன்றி நடக்க இயலாதவர்கள் மற்றும் சக்கர நாற்காலி உதவியின்றி நடமாட இயலாதவர்கள். | அரசுக் கடித எண்.89324/86–27, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை நாள்.24.11.1988. |

<u>முக்கிய குறிப்பு:</u>

மேற்கண்ட நேர்வுகளில் 53 வயதை கணக்கிடும் பொழுது <u>தனியர் பணி நியமனம் செய்யப்படும் நாளிலோ அல்லது தற்போதைய பதவிக்கு பதவி உயர்வு பெற்ற நாளிலோ</u> 53–வயதை கடந்திருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். <u>பயிற்சியில் சேரும் நாளன்று 53 வயதை கடந்தவர்களுக்கு பயிற்சியிலிருந்து எவ்வித விதிவிலக்கும் கிடையாது.</u> மேலும் விதிவிலக்கு பெறத் தகுதியுடைய பணியாளர்கள் மேற்படி அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி ஆணைகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அரசு ஆணைகளையும் <u>http://cstibhavanisagar.org/trdoc/link.pdf</u> என்ற இணைய முகவரியில் நேரடியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

## <u>பகுதி–ஈ</u>

## <u>பயிற்சிக் காலம் முழுமைக்குமான பயிற்சிக் கட்டண விபரம்:-</u>

### 1. <u>அனைத்து பயிற்சியாளர்களுக்கும் உரிய பயிற்சிக் கட்டணம்:</u>

அனைத்து பயிற்சியாளர்களும் கீழ்க்காணும் பயிற்சி கட்டணங்களை <u>ரொக்கமாக</u> பயிற்சி அனுமதி தினத்தன்று நேரில் செலுத்த வேண்டும்.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | உணவக முன்பணம் | 6000 |
| 2. | அறை வாடகை வீதம் | 1590 |
| 3. | பஞ்சாயத்து நிதி | 120 |
| 4. | காப்புத் தொகை | 100 |
| 5. | பயிற்சிக் கையேடு ( 6 தொகுதிகள்) | 585 |
| 6. | பராமரிப்பு நிதி | 265 |
| | மொத்தம் | 8660 |

### 2. <u>குழந்தையுடன் வரும் பெண் பயிற்சியாளர்களுக்கான கட்டணம்:–</u>

குழந்தைகளுடன் வரும் பெண் பயிற்சியாளர்கள் தங்குவதற்கு அடுக்குமாடி குடியிருப்பு வகை தங்கும் விடுதிகளில் தனி குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குழந்தையுடன் வரும் பெண் பயிற்சியாளர் <u>ஒரு பெண் உதவியாளரை</u> உடன் வைத்துக் கொள்ள அனுமதி உண்டு. இந்நேர்வில், <u>**3–வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.**</u>

| வ.எண் | கட்டணம் விபரம் | தொகை (ரூ.) | | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|
| | | பயிற்சியாளருக்கு (ரூ.) | உடன் தங்கும் உதவியாளருக்கு (ரூ.) | |
| 1. | உணவக முன்பணம் | 6000 | 6000 | 12000 |
| 2. | அறை வாடகை | 1590 | 3180 | 4770 |
| 3. | பஞ்சாயத்து நிதி | 120 | – | 120 |
| 4. | காப்புத் தொகை | 100 | – | 100 |
| 5. | பயிற்சிக் கையேடு | 585 | – | 585 |
| 6. | பராமரிப்பு நிதி | 265 | 1000 | 1265 |
| | மொத்தம் | 8660 | 10180 | 18840 |

குழந்தையுடன் தங்கும் பெண் பயிற்சியாளர்கள் மேலே கூறப்பட்ட கட்டணத்துடன் அவர்கள் பயிற்சிக் காலத்தில் பயன்படுத்தும் <u>மின்சாரத்திற்கான மின் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.</u>

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

## <u>பகுதி–உ</u>

## <u>பயிற்சிக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களின் பட்டியல்:–</u>

### 1. <u>அனைத்து பயிற்சியாளர்களுக்கும் பொதுவான பொருட்கள்.</u>

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கையுள்ள கருநீல நிற பனியன் | 2 செட் |
| 2 | கருநீல நிற பேண்ட் | 2செட் |
| 3 | வெள்ளை நிற கான்வாஷ் ஷூ மற்றும் கருநீல நிற சாக்ஸ் | 1 செட் |

| | | |
|---|---|---|
| 4 | பக்கெட் – பெரியது, மக் – பெரியது | 1 |
| 5 | போர்வை | 1 |
| 6 | எவர்சில்வர் கப், ஸ்பூன் (சிறியது), தட்டு, டம்ளர் | 1 |
| 7 | டார்ச் விளக்கு மற்றும் குடை | 1 |
| 8 | நோட், பேனா | 10 எண்கள் |
| 9 | கால்குலேட்டர் | 1 எண் |

2. <u>குழந்தையுடன் வரும் பெண் பயிற்சியாளர்கள் கொண்டு வர வேண்டிய பொருட்கள்:</u>

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இன்டக்ஷன் ஸ்டவ் | 1 |
| 2 | குழந்தைக்கான மெத்தை | 1 |
| 3 | குழந்தைக்கான பாய், தலையணை (உறையுடன்) | 1 |
| 4 | குழந்தைக்கு சுடுநீர் வைப்பதற்கும், உணவு தயாரிப்பதற்கும் தேவையான பாத்திரங்கள் | – |

♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣ ♣

## <u>பகுதி–ஊ</u>

<u>பிற அறிவுரைகள்:–</u>

- பயிற்சி அனுமதி நாளன்று பயிற்சியாளர்கள் பயிற்சி நிலையத்தில் **<u>காலை 09.00 மணிக்குள் தவறாமல் ஆஜராக வேண்டும்</u>**. தாமதமாக வரும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில், பயிற்சிக்கு ஆஜராகாத பணியாளர்களுக்கு மாற்றாக பிற துறைகளிலிருந்து பயிற்சியாளர்கள் அழைக்கப்படுவார்கள். எனவே, அனைத்து துறை அலுவலர்களும் பயிற்சியாளர்களை உரிய நேரத்தில் பயிற்சிக்கு ஆஜராகும் வகையில் பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- கருவுற்ற பெண் பயிற்சியாளர்கள் பயிற்சியில் பங்கேற்பதில் எவ்வித தடையும் இல்லை என்று அரசு மருத்துவரிடம் சான்றினைப் பெற்று அனுமதியின் போது சமர்ப்பிக்க வேண்டும்.
- ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சிக்கு விடுவிக்கும்போது அவருக்கு போதுமான பயண முன்பணம் வழங்கப்பட வேண்டும்.
- பயிற்சிக் காலம் முழுவதும் பயிற்சியாளர்களுக்கு துறைத் தேர்வுகள், பிறப்பு, இறப்பு போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கு மட்டும் இரண்டு நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் பங்கேற்க பயிற்சியாளர்கள் பயிற்சி நிலையத்தை விட்டுச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- பயிற்சிக்கு வரும் <u>பெண் பயிற்சியாளர்கள் பாதுகாப்பு கருதி நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும்.</u>

மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர்